# <u>அவசரகூட்டப்பொருள்கள்</u>

1. நாகர்கோவில் நகராட்சி வலம்புரிவிளை உரக்கிடங்கில் வடக்கு பகுதியில் 05.09.2016 அன்று தீ விபத்து ஏற்பட்டது கண்டறியப்பட்டது. தற்போது தீயணைப்புத்துறை மூலம் தீயணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தீயணைப்பு பணியினை விரைந்து முடிக்க நகராட்சியின் பொக்லைன் இயந்திரம் தவிர மேலும் தனியார் மூலம் 4 பொக்லைன் இயந்திரங்கள் பணியமர்த்தப்பட்டு தீயணைப்பு பணி தீயணைப்புத்துறை, தமிழ்நாடு மூலம் தீயணைப்பு பணி நடைபெற்றுவருகிறது. மேலும் தீயணைப்பு பணி நான்கு நாட்களில் நிறைவடையாத காரணத்தால் தொடர்ந்து பணி நடைபெற்று 09.09.2016 அன்று மாலை தீயணைப்பு பணி நிறைவு பெற்றது.

இந்நிலையில் மீண்டும் வலம்புரிவிளை உரக்கிடங்கில், ஏற்கனவே தீப்பிடித்து தீ அணைக்கப்பட்ட குப்பையின் மிக அருகில் உள்ள மற்றொரு பகுதியில் திடீரென பற்றிக்கொண்ட தீயினை அணைக்கும் பணி 13.09.2016 முதல் தீயணைப்பு பணி தனியார் மூலம் நான்கு பொக்லைன் இயந்திரங்கள் பணியமர்த்தப்பட்டு தீயணைப்புத்துறை மூலம் 17.09.2016 வரை பணி மேற்கொள்ளப்பட்டு முழுமையாக தீ அணைக்கப்பட்டது. இதற்கான செலவினம் தீயணைப்பு வாகனம் மற்றும் இயந்திரத்திற்கான எரிபொருள், டீசல் – 650 லிட்டர், பெட்ரோல் – 280 லிட்டர் 20W 40 ஆயில் – 1 லிட்டர், தனியார் மூலம் வாடகைக்கு எடுக்கப்பட்ட 4 பொக்லைன் இயந்திரத்திற்கான வாடகை மேற்படி பணிகளுக்கான செலவுதொகை ரூ.3,64,800/– ஆகும். மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்

கோப்பு எண்.15939/2016/எச்.2

**தீர்மான எண் : 1143 – அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9–ல் அண்ணா நகர் பகுதியில் பேவர்பிளாக் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.14,80,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்

கோப்பு எண்.இ1/13989/2016

**தீர்மான எண் : 1144 – அனுமதிக்கப்பட்டது.**